பிற்பகல் 1-35

(எ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'' மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 427,51,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் '' என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)
மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் படுகிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண்.2) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு. அறிமுகம் செய்தல். 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.